# மதுரை மாவட்டம்

தேதி:02/02/2026

## இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2026

12 – ஆம் வகுப்பு　　　கணக்குப்பதிவியல்　　　மதிப்பெண் 90

காலம் : 3.00 மணி

### பகுதி I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.　　20 x 1 = 20

கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்

1. பொறுப்புக்களைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள்
   அ) நட்டம்　ஆ) ரொக்கம்　இ) முதல்　ஈ) இலாபம்

2. கடன் விற்பனைத் தொகையைக் கணக்கிட தயாரிக்கப்படுவது
   அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு　ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
   இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு　ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு

3. உயில் கொடை ஒரு ________　அ) வருவாயினச் செலவு
   ஆ) முதலினச் செலவு　இ) வருவாயின வரவு　ஈ) முதலின வரவு

4. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு ______
   அ) பெயரளவு கணக்கு　ஆ) சொத்துக் கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு　ஈ) பிரதி நிதித்துவ ஆள்சார் கணக்கு

5. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவில் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக ________
   அ) 5.5 மாதங்கள்　ஆ) 6 மாதங்கள்　இ) 12 மாதங்கள்　ஈ) 6.5 மாதங்கள்

6. கூட்டாண்மை ஒப்பாவ ம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
   அ) சமமான விகிதத்தில்　ஆ) முதல் விகிதத்தில்
   இ) இரண்டும்　ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

7. கீழ்வருவனற்றில் எது சரியானது
   அ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
   ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
   இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்
   ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

8. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ரூ 1,00,000 சொத்துக்கள் ரூ 1,50,000 மற்றும் பொறுப்புகள் ரூ. 80,000 மூலதனமாக்க முறையில் ந ப்பெயரின் மதிப்பு --------
   அ) ரூ.40,000　ஆ) ரூ.70,000　இ) ரூ.1,00,000　ஈ) ரூ.30,000

9. பட்டியல் 1 ஐ மற்றும் 2 உடன் ஒப்பீடு செய்து சரியான விடையைத் கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டை பயன்படுத்தி தெரிவு செய்யவும்.

| பட்டியல் - 1 | பட்டியல் - 2 | |
|---|---|---|
| 1) தியாக விகிதம் | i) முதலீட்டு மாறுபடும் நிதி | அ) 1–i, 2–ii, 3–iii, 4–iv |
| 2) பழைய இலாபபகிர்வு | ii) பகிந்து தரா இலாபம் | ஆ) 1– iii, 2–ii, 3–iv, 4–i |
| 3) மறுமதிப்பீட்டு கணக்கு | iii) நற்பெயர் | இ) 1–iv, 2–iii, 3–ii, 4–i |
| 4) முதல் கணக்கு | iv) பதிவுறா பொறுப்பு | ஈ) 1–iii, 2–i, 3–ii, 4–iv |

10. கூட்டாளி சேர்ப்பின் போது புதிய கூட்டாளி நற்பெயருக்காக கொண்டு வரும் தொகை யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

அ) அனைத்து கூட்டாளிகள் ஆ) பழைய கூட்டாளிகள்

இ) புதிய கூட்டாளி ஈ) தியாகம் செய்தக் கூட்டாளி

11. மறுமதிப்பீட்டின் போது பொறுப்புகள் அதிகரிப்பு

அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) இலாபம் ஈ) மேற்கண்ட ஏதுவுமில்லை

12. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளியாக இருந்த A - என்பவர் 2020 மார்ச் 31 அன்று இறந்து விட்டார். அவருக்கு செலுத்த வேண்டிய இறுதித் தொகை ₹ 25,000 உடனடியாகச் செலுத்தப்படவில்லை. அது மாற்ற வேண்டிய கணக்கு

அ) A-ன் முதல் கணக்கு ஆ) A-ன் கடன் கணக்கு

இ) A-ன் நிறைவேற்றாளர் ஈ) A-ன் நிறைவேற்றாளர் கடன் கணக்கு

13. முகமதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு

அ) பத்திர முனைமகணக்கு ஆ) அழைப்பு முன் பணக்கணக்கு

இ) பங்கு முதல் கணக்கு ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

14. ₹ 8 செலுத்தப்பட்ட ₹ 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது. எனில் அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை அ) பங்கொன்று ₹ 10

ஆ) பங்கொன்று ₹ 8 இ) பங்கொன்று ₹ 5 ஈ) பங்கொன்று ₹ 2

15. நிதி நிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது அ) பணம் சாரா தகவல்கள்

ஆ) கடந்த கால தகவல்கள் இ) குறுகிய கால தகவல்கள் ஈ) நீண்டகால தகவல்கள்

16. ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ₹ 80,000 இரண்டாம் ஆண்டில் செலவுகள் ₹ 88,000 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன? அ) 10% ஆ) 110% இ) 90% ஈ) 11%

17. நடப்பு விகிதம் காட்டுவது

அ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன் ஆ) மேலாண்மைத் திறன்

இ) இலாபம் ஈட்டும் திறன் ஈ) நீண்டக் காலக் கடன் தீர்க்கும் திறன்

18. பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துகளுக்கும் உள்ள விகிதசாரம்

அ) உரிமையாளர் விகிதம் ஆ) முதல் உந்து திறன் விகிதம்

இ) புற அகப்பொறுப்பு விகிதம் ஈ) நடப்பு விகிதம்

19. எதிர்பதிவு சான்றாவணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

அ) தலைமைப் பதிவு ஆ) அலுவலகப் பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம் இ) அறிக்கைகள் ஈ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது.

20. அறைகலன் கடனுக்கு வாங்கியது Tally-ல் எந்த வகை சான்றாவணத்தில் பதியப்படும்

அ) பெறுதல்கள் சான்றாவணம் ஆ) உரிய குறிப்பேடு சான்றாவணம்

இ) கொள்முதல் சான்றாவணம் ஈ) செலுத்தல்கள் சான்றாவணம்

## பகுதி - II

**7 x 2 = 14**

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினா - 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21. நிலை அறிக்கை என்றால் என்ன?

22. இலாப நோக்கமற்ற அமைப்பின் வருவாயின் வரவுகளில் எவையேனும் நான்கினை தருக.

23. கூட்டாண்மை வரைவிலக்கணம் தருக.

24. உயர் இலாபம் என்றால் என்ன?

25. அருள் மற்றும் அனிதா என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 4:3 என்ற விகித்த தில் பகிர்ந்து வருகின்றனர், 31.03.2018 அன்று புதிய கூட்டாளியாக அஜய் என்பவர் சேர்த்து கொள்ளப்பட்டார். சேர்க்கையின்போது, நிறுவன ஏடுகளில் பொதுக்காப்பு ₹42,000 எனக் காட்டியது. பொதுக்காப்பினை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

26. அழைப்பு நிலுவை என்பதன் பொருள் என்ன?

27. Tally ERP 9 ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள் யாவை?

28. புற அக பொறுப்பு விகிதம் என்றால் என்ன?

29. ராதா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2017 மரர்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்,

| விவரம் | 2016-17 |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் இதர | 4,50,000 |
| வருமானம் | 67,500 |
| செலவுகள் | 1,35,000 |

30. ஆதாய விகிதம் கணக்கிடுவதன் நோக்கம் என்ன ?

## பகுதி - III

**7 x 3 = 21**

**எவையேனும் ஏழு வினா க்களுக்கு விடையளிக்கவும். வினா -40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்,**

31. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலை கண்டறியவும்:

| விவரம் | ₹ |
|---|---|
| 31.03.2019 அன்று இறுதி முதல் | 1,90,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 50,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | 30,000 |
| 01.04.2018 அன்று தொடக்க முதல் | ? |
| 31.03.2109 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நட்டம் | 40,000 |

32. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?

33. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினை தரவும்?

34. நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணி களைத் தரவும்.

35. விமல் மற்றும் ஆதி என்ற இரு கூட்டாளிகள் 2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ஜெயம் என்பவரை 1/4 பங்குக்கு கூட்டாளியாகச் சேர்த்தனர், புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

36. ரோஜா, நீலா மற்றும் கனகா என்ற கூட்டாளிகள் 4:3:3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர், 2017 ஏப்ரல் 1 அன்று ரோஜா என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின்போது கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்வதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டன.

அ) கட்டடத்தின் மதிப்பில் ₹ 30,000 அதிகரிக்க வேண்டும்.

ஆ) சரக்கிருப்பு மதிப்பில் ₹ 5,000 மற்றும் அறைகலன் மதிப்பில் ₹12,000 குறைக்க வேண்டும்.

இ) கொடுபடா பொறுப்புகளுக்கு ₹ 1,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும். மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

37. Tally ERP 9 ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்

38. பின்வரும் விவரங்களிலிருந்து மேரி வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்

| விவரம் | 2015-16 ₹ | 2016-17 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,00,000 | 5,00,000 |
| இயக்கச் செலவுகள் | 2,00,000 | 1,80,000 |
| வருமானவரி ( வரிக்கு முன் இலாபத்தில்) | 20 % | 50% |

39. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆனந்த கட்டுமான நிறுமத்தின் தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தை கணகிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| மொத்த நடப்புப் பொறுப்புகள் | 1,00,000 |
| மொத்த நடப்புச்சொத்துகள் | 2,50,000 |
| சரக்கிருப்பு | 50,000 |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 15,000 |

40. விடுப்பட்ட விவரங்களைக் கொண்டு பின்வரும் குறிப்பேட்டுப்பதிவுகளை நிறைவு செய்யவும்

| நாள் | விவரம் | பேபஎ | பற்று | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 1 | _____________________ ப<br>பங்கு விண்ணப்பக் க/கு<br>( ஒன்று ₹1 வீதம் விண்ணப்பத் தொகைப் பெற்றது) | | 2,00,000 | ________ |
| 2 | பங்கு விண்ணப்பக் க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>பங்கு விண்ணப்பத் தொகை_______<br>பங்குகளுக்கான __________ மாற்றப்பட்டது) | | ________ | 2,00,000 |

## பகுதி - IV

**7 x 5 = 35**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்**

41. 2018, ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ₹1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. 2019, மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

| **விவரம்** | ₹ | **விவரம்** | ₹ |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுதற்குரியமாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரியமாற்றுச்சீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கை ரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ₹ 30,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும். (அல்லது)

ஊட்டி மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018,மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | | |
| | | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 10,000 |
| கை ரொக்கம் | 5,000 | எழுதுபொருளுக்காக செலுத்தியது | 7,000 |
| வாடகைப் பெற்றது | 10,000 | கணிப்பொறி வாங்கியது | 25,000 |
| முதலீடுகள் விற்றது | 8,000 | சம்பளம் | 20,000 |
| சந்தா பெற்றது | 54,000 | இறுதி இருப்பு | |
| | | கை ரொக்கம் | 15,000 |
| | 77,000 | | 77,000 |

42. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கை ரொக்க ( 1.1.2018) | 4,000 | அச்சுக்கட்டணம் செலுத்தியது | 2,500 |
| சம்பளம் கொடுத்த்து | 3,000 | பாதுகாப்பு பெட்டக | |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | 10,000 | வாடகை பெற்றது | 1,000 |
| பெற்றது | | தொடர் விளையாட்டுப் பேட்டி | |
| சந்தா பெற்றது | 15,000 | வரவுகள் | 14,000 |
| வாடகை பெற்றது | 2,000 | தொடர் விளையாட்டுப் போட்டி | |
| | | செலவுகள் | 10,500 |
| | | முதலீடுகள் வாங்கியது | 25,000 |

(அல்லது) குமார் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடப்பட வேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

| நாள் | ₹ |
|---|---|
| மார்ச் 1 | 4,000 |
| ஜூன் 1 | 4,000 |
| செப்டம்பர் 1 | 4,000 |
| டிசம்பர் 1 | 4,000 |

எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

43. பின்வரும் விவரங்களைக் கொண்டு ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்

அ) சராசரி இலாபம் ₹ 14,000

ஆ) சாதாரண இலாபம் ₹ 4,400

இ) சாதாரண இலாபம் விகிதம் 15%

ஈ) நற்பெயருக்கான கொள்முதல் ஆண்டுகள் 5

5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 15% என்ற வட்டி விகிதத்தில் ₹ 1 ன் தற்போதைய ஆண்டுத்தொகை மதிப்பு ₹ 3,352.

(அல்லது)

ஆனந்த் மற்றும் பாலு என்ற கூட்டாளிகள் முறையே 7 : 3 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 31 மார்ச், 2018 ஆம்நாளைய அவர்களது இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | நிலம் | 60,000 |
| ஆனந்த் | 50,000 | | சரக்கிருப்பு | 40,000 |
| பாலு | 30,000 | 80,000 | கடனாளிகள் | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | | 20,000 | கை ரொக்கம் | 10,000 |
| இலாபநட்டக/கு | | 30,000 | | |
| | | 1,30,000 | | 1,30,000 |

2018 ஏப்ரல் 1 ஆம் நாளன்று அவர்கள் சந்துரு என்பவரை கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்கு ஒப்புக்கொண்டு 1/4 பங்குக்கு கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர்

(அ) சரக்கிருப்பு மதிப்பை ₹ 3,000 குறைப்பது.

(ஆ) வாராஜயக் கடன் ஒதுக்கு ₹ 2,000 உருவாக்குவது.

(இ) நிலத்தின் மதிப்பை ₹ 10,000 மதிப்பேற்றம் செய்வது.

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும்முதல் கணக்கினை கூட்டாளி சேர்ப்பிற்குப் பின் தயாரிக்கவும்

44. ஜெமினி வரையறு நிறுமம் பங்கொண்டு ₹7 அழைக்கப்பட்ட 20 சாதாரண பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தது. மகேஷ் என்பவர் அப்பங்குகளுக்கான விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீடு பணம் ₹5 செலுத்திய இருந்தார். அவற்றில் 15 பங்குகள் பங்கொன்று ₹ 6 வீதம் பெற்றுக் கொண்டு ₹ 7 வீதம் செலுத்தப்பட்ட பங்குகளாக நரேஷ் என்பவருக்கு மறுவெளியீடு செய்யப்பட்டது பங்கு ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். (அல்லது)

தாய் நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 1,00,000 நேர்மைப்பங்குகளை வெளியீடு செய்தது. விண்ணப்பத்தின் போது ₹ 5; ஒதுக்கீட்டின்போது ₹ 2; முதல் அழைப்பின்போது ₹ 2 மற்றும் இறுதி அழைப்பின்போது ₹1 செலுத்த வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு தொகை பெறப்பட்டது. குறிப்பேட்டுப்பதிவுகள் தரவும்.

45. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் கண்ணன், ரஹிம் மற்றும் ஜான் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5 : 3 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2017 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | | |
| கண்ணன் | 1,00,000 | | கட்டடம் | 90,000 |
| ரஹிம் | 80,000 | | இயந்திரம் | 60,000 |
| ஜான் | 40,000 | 2,20,000 | கடனாளிகள் | 30,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | | 30,000 | சரக்கிருப்பு | 20,000 |
| கடனீந்தோர் | | 20,000 | வங்கி ரொக்கம் | 50,000 |
| | | | இலாப நட்ட க/கு (நட்டம் | 20,000 |
| | | 2,70,000 | | 2,70,000 |

ஜான் 2018, ஜனவரி 1 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

அ) கட்டடத்தின் மீது 10% மதிப்பேற்றம் செய்யப்பட்டது

ஆ) சரக்கிருப்பு மதிப்பு 5% குறைக்க வேண்டும்

இ) ₹1,000 வாராக்கடன் ஒதுக்கு உருவாக்க வேண்டும்

ஈ) பதிவுறா பொறுப்பு ₹8,000 என கண்டறியப்பட்டது

உ) விலகும் கூட்டாளிக்குரிய தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டது.

மதிப்பீட்டுக் கணக்கு, கூட்டாளிகள் முதல் கணக்கு மற்றும் விலகலுக்குப் பின் நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கவும். (அல்லது)

பின்வரும் விவரங்களைக் கொண்டு, முல்லை வரையறு நிறுமத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ இலட்சங்களில் 2015 - | | |
|---|---|---|---|
| | 2015-16 | 2016-17 | 2017-18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 100 | 120 | 160 |
| இதர வருமானம் | 20 | 24 | 20 |
| செலவுகள் | 20 | 14 | 40 |
| வருமானவரி | 30% | 30% | 30% |

46. பின்வரும் விவரங்களிருந்து மொத்தக் கொள்முதலைக் காணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று பற்பல கடனீந்தோர் | 30,000 | கொள்முதல் திருப்பம் | 15,000 |
| 2018 ஜனவரி 1 அன்று செ/மா/சீ | 25,000 | ரொக்க கொள்முதல் | 2,25,00 |
| கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது | 12,0000 | 31.12.2018 அன்று கடனீந்தோர் | 25,000 |
| செ/மா/சீ செலுத்தியது | 30,000 | 31.12.2018 அன்று செ/மா/சீ | 20,000 |

(அல்லது)

ரொவினா நிறுமத்தின் பின்வரும் வியாபார நடவடிக்கைகளிருந்து i) மொத்த இலாபம் ii) நிகர இலாபம் iii) இயக்க அடக்க விலை iv) இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| I. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 4,00,000 |
| II. இதர வருமானம் | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 4,000 |
| III. மொத்த வருவாய் | |
| IV. செலவுகள்: | 4,04,000 |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 2,10,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 30,000 |
| நிதிசார் செலவுகள் | 24,000 |
| இதர செலவுகள் ( நிர்வாக மற்றும் விற்பனை) | 60,000 |
| மொத்தசெலவுகள் | 3,24,000 |
| V. வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 80,000 |

47. மரியா வரையறு நிறுமம் 2018, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| I பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| பங்குதாரர் நிதி | 4,00,000 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 3,20,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 80,000 |
| மொத்தம் | 8,00,000 |
| II. சொத்துகள் | |
| நிலைச் சொத்துகள் | 6,000,00 |
| நடப்புச் சொத்துகள் | 2,00,000 |
| மொத்தம் | 8,00,000 |

( அல்லது)

கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளின் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.